## நம் தாய்த் தமிழ்நாட்டின் எதிர்காலத்தைக் காக்க, – கட்சி வேறுபாடுகளைக் கடந்து

# ஓரணியில் திரள்வோம் ! சூழும் ஆபத்தை நம் ஒற்றுமையால் வெல்வோம் !

## மார்ச் 5–ஆம் தேதி நடைபெற உள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தைச் சுட்டிக் காட்டி - தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘ட்விட்டர்’ பதிவு!

**சென்னை,பிப்.26-**

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், நம் தாய்த் தமிழ்நாட்டின் எதிர்காலத்தைக் காக்க கட்சி வேறுபாடுகளைக் கடந்து ‘ஓரணியில் திரள்வோம்,! சூழ்ந்துள்ள ஆபத்தை வெல்வோம்!’ எனக் குறிப்பிட்டுள்ளார்.**

**மார்ச் 5-ஆம் தேதி நடைபெற உள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தை சுட்டிக் காட்டி முதல்வர் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்கிற முறையில், 2026-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலான மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை மிகுந்த ஆபத்தாக இருப்பதை அனைவரின் கவனத்துக்கும் கொண்டு வருகிறேன்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு முதலிய தென் மாநிலங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன. ஆனால், அதுவே நாடாளுமன்றத்தில் நம் பலம் குறையக் காரணமாகி விடும்; நம் குரலை நசுக்கிவிடக் கூடும் என்றால் அது எவ்வகையில் நியாயமாகும்?

ஜனநாயக முறையில் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்தும் எந்த நடவடிக்கையினையும் செய்யவே கூடாது என்பதல்ல எங்கள் வாதம். அதற்காக, தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தில் சமரசம் செய்துகொள்ளும் பேச்சுக்கே இடமில்லை!

கூட்டாட்சியியல் கோட்டுபாடுகளைப் பாதுகாக்கும் விதத்தில், நியாயமான, வெளிப்படைத்தன்மை மிக்க ஒரு வழிமுறையைப் பின்பற்றுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கிறோம்.

இச்சூழ்நிலையில், தமிழ்நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் இந்த மிக முக்கியப் பிரச்சினையைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக, தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் அனைத்திற்கும் அழைப்பு விடுக்கிறேன்.

நம் தாய்த் தமிழ்நாட்டின் எதிர்காலத்தைக் காக்க, கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஓரணியில் திரள்வோம்! சூழ்ந்துள்ள ஆபத்தை நம் ஒற்றுமையால் வெல்வோம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தனது வலைதளத்தில் பதிவிட்டார்.

முன்னதாக இதுகுறித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கு எழுதிய கடிதம் வருமாறு:



**இந்தியாவின் கூட்டாட்சி முறையில், தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும், தமிழ் மக்களின் நலன் காப்பதற்கும் தேவையான பல்வேறு முயற்சிகளை நாம் பல ஆண்டுகளாக முன்னெடுத்து வருகிறோம். இருப்பினும், நிதிப் பகிர்விலும், அதிகாரப் பகிர்விலும், நம் உரிமைகளைக் காப்பதற்குத் தொடர்ந்து போராட வேண்டிய சூழ்நிலையிலே நாம் உள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நிலையில் 2026–ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில், மக்களவைத் தொகுதிகளை ஒன்றிய அரசு மறுசீரமைப்பு செய்ய வாய்ப்புள்ள சூழலில், நம் மாநிலம் சந்திக்கக்கூடிய இடர்பாடுகளை எதிர்கொள்வதற்கு, தங்கள் கட்சி / இயக்கத்தின் ஆதரவைக் கோருவதற்காக இக்கடிதத்தை நான் தங்களுக்கு எழுதுகிறேன்.**

**நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 82–வது பிரிவு, மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, மக்களவைத் தொகுதிகளை மறுசீரமைப்பதற்கு வகை செய்தாலும், தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் அழுத்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட அரசியல்சட்டத் திருத்தங்களால் மட்டுமே, இத்தகைய மறுசீரமைப்பு 2026–ஆம் ஆண்டு வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 2026–ஆம் ஆண்டு வரையிலும், 1971–ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையிலேயே மக்களவைத் தொகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை, மாநிலங்கள் முனைப்போடு மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும், இந்த இலக்கை அடைவதில் அனைத்து மாநிலங்களின் செயல்பாடுகளும் ஒரே அளவில் இல்லை.**

### தண்டிக்க நினைக்கும் ஒன்றிய அரசு!

**தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள், மக்கள்தொகை வளர்ச்சிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டதால்தான், இந்த வளர்ச்சி கணிசமாகக் குறைந்துள்ளது. இத்தகைய முன்முயற்சிகள் தான், நாட்டின் மொத்த மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தி, நாடு வளர்ச்சி அடைவதற்கான முக்கியக் காரணமாகவும் இருந்து வருகின்றன. எனவே, மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தி, நாட்டின் வளர்ச்சியிலும் பெரும்பாங்காற்றி வரும் நமது மாநிலத்தை, தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் ஒன்றிய அரசு தண்டிக்க நினைப்பது எவ்வகையிலும் ஏற்கத்தக்கது அல்ல.**

**தற்போதைய மக்கள்தொகையின் அடிப்படையில், மக்களவைத் தொகுதிகளின் மறுசீரமைப்பை இரண்டு விதமான முறைகள் மூலம் மேற்கொள்ள கருதப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. முதல் முறையின் கீழ், ஏற்கெனவே உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையின்படி, தற்போதைய மக்கள்தொகையின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்தால், தமிழ்நாடு 8 மக்களவைத் தொகுதிகளை இழக்க வேண்டியிருக்கும். இரண்டாவது முறையின்படி, மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 848 ஆக உயர்த்தி, தற்போதைய மக்கள்தொகையின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்தால், நமக்குக் கூடுதலாக கிடைக்க வேண்டிய 22 தொகுதிகளுக்குப் பதிலாக, 10 தொகுதிகள் மட்டுமே கிடைத்து, 12 தொகுதிகளை நாம் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே, எவ்வகையில் பார்த்தாலும், தமிழ்நாட்டுக்குப் பேரிழப்பு ஏற்படும் வாய்ப்பே நம் முன்நிற்கிறது.**

### தமிழ்நாட்டிற்குப் பேரிழப்பு!

**தற்போதைய மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கையின் அடிப்படையில்கூட, பல்வேறு நியாயமான கோரிக்கைகளை, தமிழ்நாடு பெற இயலவில்லை. ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பு, ஒன்றிய அரசு சார்ந்த திட்டங்களில் நிதி குறைக்கப்படுவது அல்லது விடுவிக்கப்படாமல் தடுப்பது, ஒன்றிய அரசு அதிகாரத்தில் நமது பிரதிநிதித்துவம் குறைந்து வருவது, நிதிப் பகிர்வில் காட்டப்படும் பாரபட்சம் என அனைத்து வகைகளிலும், தமிழ்நாட்டின் உரிமைகளும், சுயாட்சியும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில், நமது மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை மேலும் குறைக்கப்பட்டால், தமிழ்நாட்டின் குரல்வளை முழுமையாக நசுக்கப்படும்.**

### அபாயம்

**மேற்கூறிய பிரச்சினைகள் மட்டுமின்றி, தமிழ்நாட்டின் நலன் சார்ந்த பல்வேறு கொள்கை முடிவுகளிலும், ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் நமது உரிமைகளைப் பறிப்பதாகவே அமைந்துள்ளன. “நீட்” நுழைவுத் தேர்வு, பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலமாக மாநில அரசுகளின் உயர்கல்வித் துறையின் உரிமைகளை அபகரிப்பது, நமது தனித்துவமான பண்பாடு மற்றும் மொழிப் பாதுகாப்புக் கொள்கைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளில், தேசிய அளவிலான கொள்கைகளை நமது மாநிலத்தின் மீது திணிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில், மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு நடந்தால், இப்பிரச்சினைகளுக்கு எதிராகக் கிளர்ந்து, நமது தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான ஆற்றலும், அதிகாரமும் இல்லாத நிலை ஏற்படும் அபாயத்தை நாம் எதிர்நோக்கியுள்ளோம்.**

**எனவே, இந்தக் கடுமையான விளைவுகளைக் கருத்தில் கொண்டு, மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு முறையானது. நமது மாநிலத்தைப் பாதிக்காத வகையில் செயல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் அல்லது இந்த முயற்சி நமது கூட்டாட்சிக் கட்டமைப்பை முழுமையாகச் சிதைப்பதற்கு முன்பாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை முன்னெடுக்க நமக்குக் குறைந்த அளவு கால அவகாசமே இருப்பதால், நாம் அனைவரும் ஒன்றாகக் கைகோர்க்க வேண்டிய காலமிது. இந்தக் கூட்டு முயற்சிக்கு உங்களது ஒத்துழைப்பைக் கோருகிறேன். நாம் அனைவரும் ஒன்றாகக் கலந்தாலோசித்து, நமது மாநிலத்தின் நலன் காப்பதற்கான ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில், தகுந்த உத்திகளைத் தீட்டிச் செயல்படுத்திட தங்களுக்கு இத்தருணத்தில் அழைப்பு விடுக்கிறேன்.**

**இது தொடர்பாக, மார்ச் 5 அன்று, காலை 10 மணியளவில் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10–வது தள கூட்ட அரங்கில், நாம் அனைவரும் கலந்தாலோசிக்கலாம் 61601 நான் கருதுகிறேன். இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### மாவட்டச் செயலாளர் –அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை – வழக்கறிஞர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமை!

# முதல்வர் பிறந்தநாள் மனிதநேய விழா: திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் புகழரங்கம்!

### தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் – தில்லி கம்பன் கழக நிறுவனத் தலைவர் கே.வி.கே.பெருமாள் – எழுத்தாளர் பாரதி கிருஷ்ணகுமார் – இயக்குநர் சீனுராமசாமி சிறப்புரை!

*சென்னை, பிப்.26-*

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் வழக்கறிஞர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் 72-வது பிறந்த நாள் - மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில், மாபெரும் புகழரங்கம் நடைபெறுகிறது.

தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன், முன்னாள் ஒன்றிய அரசு அதிகாரி, நிறுவனர்-தலைவர் தில்லி கம்பன் கழகம் கே.வி.கே.பெருமாள், எழுத்தாளர் பாரதி கிருஷ்ணகுமார், இயக்குனர் - சீனுராமசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனித நேயம் - 6, பொது வாழ்வில் தலைவரின் இதய ஒலி! தமிழரின் நவீன மொழி!! எனும் தலைப்பில் திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் இன்று (26.2.2025 புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, குக்ஸ் சாலை, ஹேம்ராஜ் பவனில்நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார். செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, பி.உதயசங்கர், பெரம்பூர் ஆர்.ராஜன், எஸ்.புஷ்பராஜ் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில், தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன், முன்னாள் மத்திய அரசு அதிகாரி, நிறுவனர்-தலைவர் தில்லி கம்பன் கழகம் கே.வி.கே.பெருமாள், எழுத்தாளர் - பாரதி கிருஷ்ணகுமார், இயக்குனர் - சீனுராமசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., சரிதா மகேஷ்குமார், என்.கிருஷ்ணமூர்த்தி. மாநில நிர்வாகிகள்: சங்கரிநாராயணன், தமிழன் பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, பரிதி இளம்சுருதி, எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், ஜி.எம்.தேவன், புலவர் சாமிநாகப்பன், பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், ஏ.நாகராசன் எம்.சி, கூ.பிஜெயின் எம்.சி, வே.வாசு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், ஸ்ரீராமுலு எம்.சி. பொதுக்குழு உறுப்பினர்கள்: பி.ஜே.துளசிங்கம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், ரமேஷ்(எ) நிலகண்டன், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, எம்.இப்ராஹிம் கனி, ஆ.நிர்மலாதேவி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, இரா. கலைச்செல்வி. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஜி. ஜெ.பிரபு, க.வினோத்குமார், ஆர்.டி.சங்கர்நானா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், ந.துலுக்காணம், எம். பெரோஸ்கான், ஜி.தாமோதரன், எல்.பி.எப்.மோகன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், துரை கண்ணன், டாக்டர்.ஜி.சாந்தகுமார், ஜி.வி.நாகவள்ளி, க. பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, ம.அசோக்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி. மாமன்ற உறுப்பினர்கள்: வழக்கறிஞர் மு. சரவணன், ரமணிலோகோஷ், தமிழ்செல்வி சசிகுமார் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறுகிறார்கள்.

---

## அண்ணாநகர் 101 வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் அறிக்கை!

*சென்னை, பிப். 26*

அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. ஆலோசனைப்படி, இன்று (26.02.2025 புதன்கிழமை) மாலை 7 மணி அளவில், புல்லா அவன்யுவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர்

எஸ்.முரளிகிருஷ்ணன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, இலக்கிய அணி, வர்த்தக அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி என பல்வேறு அணிகள் நிர்வாகிகள் சார்பு மன்றம், இளைஞர் அணி மன்றத்தை சார்ந்த நிர்வாகிகள், கழக முன்னோடிகள்,

கழக செயல் வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இந்த செயற்குழுக் கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1 அன்று தமிழர் எழுச்சி நாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.